# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1709/9 - 2011 ජූනි 06 වැනි සඳුදා - 2011.06.06

*1709/9 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூன் மாதம் 06 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்*

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின்படி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர், தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்த்தன ஆகிய நான், இச்சபையின் மாரஸ்ஸன நீர் வழங்கல் திட்டத்தின் பொத்கொட நீர்த் தாங்கி அமைப்பது தொடர்பாக காணித்துண்டொன்று தேவைப்படுவதனால், கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையா சொத்துக்களின் உரிமைக் கொள்ளலை இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.*

*தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்த்தன,*
*நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர்.*

*நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,*
*இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை, பத்தரமுல்லை,*
*2011, மே 31.*
*5/2/1/914.*

**அட்டவணை**

*கண்டி மாவட்டம், பாத்தஹேவாஹெட்ட பிரதேச செயலாளர் பிரிவில், இல. 1018, போப்பிட்டிய கிராம அலுவலர் பிரிவின், பொத்கொட எனும் கிராமத்திலுள்ள கலபிட்டஹேனை எனும் காணியில் அதிகாரமளிக்கப்பட்ட நிலஅளவையாளர் திரு. ஜீ. ஆர். டபிள்யூ. எம். வீரகோன் அவர்களினால் தயாரிக்கப்பட்ட இல. 11003 கொண்ட துண்டு இல. 13 மற்றும் 14 என காட்டப்பட்டுள்ள காணியின் முழு விஸ்தீரணத்தில் சுமார் 06 ஹெக்டேயார் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளைக் கொண்ட காணித்துண்டு :-*

*வடக்கு : இல. 11003 ஐக் கொண்ட அதிகாரமளிக்கப்பட்ட நில அளவையியலாளர் வரைபடத்தின் துண்டு இல. 12 ;*
*கிழக்கு : போப்பிட்டிய ராஜசிங்க மகா வித்தியாலயத்திற்குச் சொந்தமான காணி ;*
*தெற்கு : போப்பிட்டிய ராஜசிங்க மகா வித்தியாலயத்திற்குச் சொந்தமான காணி ;*
*மேற்கு : இல. 11003 ஐக் கொண்ட அதிகாரமளிக்கப்பட்ட நிலஅளவையியலாளர் வரைபடத்தின் துண்டு இல. 13 மற்றும் 14 இன் எஞ்சிய பகுதி.*

*உரிமைகோருபவரின் பெயரும் முகவரியும் :*

*1. திருமதி சோமா குலசேகர,*
*பொத்கொட, மாரஸ்ஸன.*

*2. திருமதி ஜே. எஸ். எம். லீலாவதி,*
*குலசேகர ஸ்ரோர்ஸ்,*
*போத்கொட, மாரஸ்ஸன.*

*6 - 430*

## 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் கட்டளைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்ட அதிகாரத்திற்கிணங்க, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர், தினேஷ் சந்தர ரூபசிங்க குணவர்த்தன ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கண்டி மற்றும் அதற்கண்மித்த பாரிய நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கட்டுகஸ்தொட்ட நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து யட்டிவாவல நீர் அழுத்தச்சாலைவரை செல்லும் மாற்றீட்டு நீர்க்குழாய் வழியை அமைப்பதற்கு மேலதிக காணித்துண்டாக தேவைப்படும். இங்கு கீழ் அட்டவணையின் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டுகளின் அசையாச் சொத்துகளின் உரிமையை எடுத்துக் கொள்வதற்கு இந்த கட்டளையின்படி அனுமதியளிக்கின்றேன்.*

*தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்த்தன,*
*நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர்.*

*தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,*
*இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2011, யூன் 02.*
*5/2/1/922.*

### உப படிவம்

*மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில், ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலாளர் பிரிவில், ரத்மலே கிராம சேவையாளர் பிரிவில், கொண்டதெனிய கிராமத்தில் அமைந்த, சுமார் 0.95 பர்சஸ் முழு அளவிலான கீழ்காணும் எல்லைகளைக் கொண்ட காணித்துண்டுகள் இரண்டு :-*

*காணித்துண்டு இலக்கம் :* A

*காணியின் பெயர் : கோன்கஹமுதுனே ஹேன வத்த ;*
*விஸ்தீரணம் : 0.8 பேர்ச்சஸ்.*

*எல்லைகள் :*

*வடக்கு : இனிகல பஹல கொண்டதெனிய பிரதேச சபை பாதை ;*
*கிழக்கு : செய்யது அலி மொஹமட் ஹனீபா உரிமைகோரும் காணி ;*
*தெற்கு : இக்காணியின் எஞ்சிய பகுதி ;*
*மேற்கு : இனிகல - உகுரெஸ்ஸபிட்டிய பாதை.*

*காணிக்கு உரிமைகோருபவரின் பெயரும் முகவரியும் : 1. மொஹமட் அப்துல் ரஹுமான்,*
*இலக்கம் : 492,*
*இனிகல,*
*கட்டுகஸ்தொட்ட.*

*காணித்துண்டு இலக்கம் :* B

*காணியின் பெயர் : கோன்கஹமுதுனே ஹேன வத்த ;*
*விஸ்தீரணம் : 0.15 பேர்ச்சஸ்.*

*எல்லைகள் :*

*வடக்கு : இனிகல பஹல கொண்டதெனிய பிரதேச சபை பாதை ;*
*கிழக்கு : வீடுகளுக்குச் செல்லும் அடிப்பாதை ;*
*தெற்கு : இக்காணியின் எஞ்சிய பகுதி ;*
*மேற்கு : மொஹமட் அப்துல் ரஹுமான் உரிமைகோரும் காணி.*

*காணிக்கு உரிமைகோருபவரின் பெயரும் முகவரியும் : 1. செய்யது அலி மொமட் ஹனீபா,*
*இலக்கம் : 227,*
*பஹல கொண்டதெனிய,*
*கட்டுகஸ்தொட்ட.*

*06- 431*

## *1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்*

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின்படி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர், தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்த்தன ஆகிய நான், இச்சபையின் குண்டசாலை நீர் வழங்கல் திட்டத்தின் உயன்வத்தை நீர்க் கோபுரத்தின் நுழைவாயில் மற்றும் நீர்க் குழாய் பதித்தல் தொடர்பாக காணித்துண்டொன்று தேவைப்படுவதனால், கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் சேவக உரிமைக் கொள்ளலை இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.*

*தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்த்தன,*
*நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர்.*

*நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,*
*இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை, பத்தரமுல்லை,*
*2011, மே 31.*
*5/2/1/924*

### *அட்டவணை*

*கண்டி மாவட்டம், குண்டசாலை பிரதேச செயலாளர் பிரிவில், பல்லேகுன்னேபான தெற்கு (665) கிராம அலுவலர் பிரிவின், குன்னேபான எனும் கிராமத்திலுள்ள கல்லெனகொடஹேன எனும் காணியின் முழு விஸ்தீரணத்தில் சுமார் 09 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளைக் கொண்ட காணித்துண்டு :-*

*வடக்கு : திரு. ஆர். டபிள்யூ. எம். அமரபால உரிமைகோரும் கல்லெனகொடஹேன*
*கிழக்கு : மு. பி. மஹ6706 இன் துண்டு இல. 01 ;*
*தெற்கு : திரு. ஆர். டபிள்யூ எம். அமரபால உரிமைகோரும் கல்லெனகொடஹேன ;*
*மேற்கு : பிரதான வீதியில் இருந்து பல்லேகம்மெந்தைக்குச் செல்லும் பாதை.*

*உரிமைகோருபவரின் பெயரும் மற்றும் முகவரியும் : திரு. ஆர். டபிள்யூ. எம். அமரபால,*
*12, ரொஸ்மண்ட் இடம்,*
*ஜோர்ஜ் ஈ த சில்வா மாவத்தை,*
*கண்டி.*

*6 - 432*

---

## *1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்*

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின்படி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர், தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்த்தன ஆகிய நான், இச்சபையின் கஹவத்தை நீர் வழங்கல் திட்டத்தின் துளைதுவாரக் கிணறு மற்றும் பம்பி நிலையம் அமைப்பது தொடர்பாக காணித்துண்டொன்று தேவைப்படுவதனால், கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையா சொத்துக்களின் உரிமைக் கொள்ளலை இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.*

*தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்த்தன,*
*நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர்.*

*நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,*
*இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை, பத்தமுல்லை,*
*2011, மே 31.*
*5/2/1/907*

**அட்டவணை**

இரத்தினபுரி மாவட்டம், கொடகவெல பிரதேச செயலாளர் பிரிவில், கொடகெத்தன கிராம அலுவலர் பிரிவின் வராபிட்டிய (கொடகெத்தன) எனும் கிராமத்திலுள்ள பதலவத்தை, ரதாவத்தை, தெஹிகஹவத்தை, ரங்வல பாலஎதனாகே அரம்ப எனும் காணியின் முழு விஸ்தீரணத்தில் சுமார் ஹெக்டேயார் 0.03357 விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளைக் கொண்ட காணித்துண்டு.

வடக்கு : வேகங்கை மற்றும் திரு. எம். அஜித் பிரியந்த உரிமைகோரும் காணி ;

கிழக்கு : திரு. எம். அஜித் பிரியந்த உரிமைகோரும் காணி மற்றும் கஹவத்தையில் இருந்து திம்புல்வெல வரை செல்லும் பன்சலை வீதி ;

தெற்கு : கஹவத்தையில் இருந்து திம்புல்வெல வரை செல்லும் பன்சலை வீதி மற்றும் அதே காணியின் எஞ்சிய பகுதி ;

மேற்கு : அதே காணியின் எஞ்சிய பகுதி மற்றும் வேகங்கை.

உரிமைகோருபவரின் பெயரும் முகவரியும் :

1 திரு. கே. வீ. தம்மிக பிரியந்த,
இல. 133, பன்சல வீதி, கஹவத்தை.

2. திரு. டபிள்யூ. எம். குணதாச,
பன்சல வீதி, கஹவத்தை.

3. திரு. பீ. எம். சந்திரசேன,
தெனும் கும்புர, கட்டன்கே, கஹவத்தை,

4. திரு. என். ஜீ. சிறிநிமல்,
மற்றும் இன்னும் ஆட்கள்
இல. 134 A, பன்சல வீதி, கஹவத்தை.

6 - 433

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.